இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 12 ஜூலை 2017 திகதியிடப்பட்ட ADB.org இல் உள்ள அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட சாலை முதலீட்டுத் திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட சாலை முதலீட்டுத் திட்டம் |
| திட்ட இலக்கம் | 50301-001 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | முன்மொழியப்பட்டது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன் |
| நிதியிடல் மூலம்/ தொகை | **MFF வசதி எண்ணக்கரு: இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட சாலை முதலீட்டுத் திட்டம்**<br>சாதாரண மூலதன வளங்கள்: US$ 815.00 மில்லியன்<br>சலுகையான சாதாரண மூலதன வளங்கள்/ ஆசிய அபிவிருத்தி நிதியம்: US$ 85.00 மில்லியன் |
| மூலோபாய செயற்பட்டியல் | சுற்றுச்சூழல் பேண்தகு வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு |

தனியார் துறை வளர்ச்சி

| | |
|---|---|
| துறை / உபதுறை | **போக்குவரத்து** – சாலைப் போக்குவரத்து (நகரம் அல்லாத) |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | பயனுள்ள பால் பெருவோட்ட இணைவு |
| விவரணம் | பின்தங்கிய நான்கு மாகாணங்களில் இலக்குவைக்கப்பட்ட இந்த முதலீட்டுத் திட்டம், ஏனைய பிரதேசங்களுக்கான முதல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியினை மிகைநிரப்பி அதன் மூலம் நாடு பூராகவுமுள்ள அனைத்து முன்னுரிமை கிராமிய அபிவிருத்தி மையங்களை உள்ளடக்கும். இது கிராமிய அணுகல் சாலைகளின் சுமார் 3,400 கிலோ மீற்றர்களை (கிமீ) அனைத்து காலநிலைத் தரத்திற்கு தரமுயர்த்திப் பராமரிக்கும்; தேசிய சாலைகளின் சுமார் 340 கிமீ இனை ஒரு நல்ல நிலைமைக்கு புனரமைத்துப் பராமரிக்கும்; மற்றும் சாலைப் பாதுகாப்பு, பாராமரிப்பு, திறன் மேம்பாடு, ஒப்பந்த முகாமைத்துவம், மற்றும் கிராமிய சாலை வடிவமைப்பு தொடர்பில் சாலை முகவர் நிறுவனங்களின் திறன் மேம்பாடு. பிரதான அம்சங்கள் முதல் ஒருங்கிணைக்கப்பட்ட சாலை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை ஒத்ததாக அமைக்கப்படும். முன்மொழியப்பட்ட முதலீட்டுத் திட்டம் கிராமப்புறப் பகுதிகளின் நிலையான வளர்ச்சிக்கு ஒரு வினையூக்கியான பாத்திரத்தை வகிக்கும். |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபாயத்திற்கான தொடர்பும் | வறுமைக் குறைப்பில் விரைவான முன்னேற்றம் இருந்த போதிலும், இலங்கை இன்னமும் முற்றாக வறுமையை ஒழிப்பதில் பல்வேறு சாவல்களுக்கு முகங்கொடுக்கின்றது. ஏழைகள் சார்பான பொருளாதார வளர்ச்சி இயக்கப்பட வேண்டியிருப்பது பொதுச் செலவினங்களின் உயர் விகிதங்களினாலன்றி மாறாக சந்தை நோக்கிய பெறுமதி சேர்க்கை மற்றும் தனியார்த்துறை தலைமையில் முன்னெடுக்கப்படும் முதலீட்டினாலாகும். இந்த சூழலில் சந்தை, வணிக மற்றும் அறிவுசார் வாய்ப்புக்கள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றிற்கான அணுகல், குறிப்பாக விவசாயம்சார்ந்த மதிப்புச் சங்கிலியுடன் சேர்ந்து மேலும் வறுமைக் குறைப்பு மற்றும் கிராமப்புறங்களில் பகிரப்பட்ட செழிப்பிற்குத் திறவுகோலாக இருக்கும். |
| தாக்கம் | இலங்கையில் கிராமிய சனசமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார மையங்கள் இடையேயான இணைப்பு மேம்படுத்தப்பட்டிருத்தல். |
| விளைவு | திட்ட சாலைகளில் போக்குவரத்து வினைத்திறன் அதிகரித்திருத்தல் |
| வருவிளைவுகள் | தெரிவுசெய்யப்பட்ட கிராமிய சனசமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார மையங்கள் இடையேயான சாலை நிலைமைகள் மேம்படுத்தப்பட்டிருத்தல்<br><br>சாலை முகவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டிருத்தல் |
| பூகோளம்சார் அமைவிடம் | |

சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் சார்ந்த அம்சங்களின் சுருக்கம்

சுற்றுச்சூழல் அம்சங்கள்

சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம்

சுதேச மக்கள்

**பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

திட்ட வடிவமைப்பின் போது

திட்ட செயற்படுத்தலின் போது

வியாபார வாய்ப்புக்கள்

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | நிபுணத்துவ ஆலோசகர்கள், நிறுவனங்களாகவோ அல்லது தனிநபர்களாகவோ, திட்டத்தின் செயலாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கு உதவுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர்களின் பயன்பாடு தொடர்பான வழிகாட்டிகளிற்கு இணங்க (2013, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) ஆட்சேர்க்கப்படுவர். |
| கொள்வனவுகள் | குடிசார் வேலைகள் மற்றும் உபகரண கொள்வனவுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்வனவு வழிகாட்டிகளுக்கு இணங்க (2015, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) மேற்கொள்ளப்படும். |

பொறுப்பான பணியாளர் குழாம்

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | நகாய், கன்ஸோ |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி திணைக்களம் | தெற்கு ஆசிய திணைக்களம் |

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | போக்குவரத்து மற்றும் தொடர்பாடற் பிரிவு, தெற்காசியத் திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**<br>8வது மாடி, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,<br>கொஸ்வத்த,<br>பத்தரமுல்ல, இலங்கை |

கால அட்டவணை

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | 12 ஏப்பிரல் 2017 |
| உண்மை அறிதல் | 22 மே 2017 இலிருந்து 26 மே 2017 வரை |
| MRM | 03 ஜுலை 2017 |
| ஒப்புதல் | - |
| கடந்த மீளாய்வுப் பணி | - |
| கடந்த PDS புதுப்பிப்பு | 12 ஏப்பிரல் 2017 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாது இருக்கலாம் ஆனால் அது கிடைக்கப்பெறும் போது சேர்த்துக்கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் (PDS) உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும்

பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.